# வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. வி.முரளீதரன் சிரியாவுக்கு பயணம் (ஜூலை 12-13, 2023)

ஜூலை 11, 2023

வெளியுறவு மற்றும் நாடாளுமன்றம் விவகாரங்கள் அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு.வி.முரளீதரன் அவர்கள், ஜூலை 12-13, 2023 வரை சிரிய அரபுக் குடியரசிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். ஆகஸ்ட் 2016க்குப் பிறகு, இந்தியாவிலிருந்து சிரியாவுக்கு அமைச்சர்கள் அளவில் இதுவே முதல் சிரியா பயணம். மேலும், அமைச்சர் வி. முரளீதரன் அவர்களுக்கும் இதுவே முதல் சிரியா பயணமாகும்.

2. இந்த பயணத்தின் போது, தலைநகர் டமாஸ்கஸில் உள்ள சிரிய தலைவர்களை அமைச்சர் முரளீதரன் சந்தித்து கலந்துரையாடுகிறார். இந்திய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் இந்தியாவில் படித்த அல்லது படிக்கத் தொடங்கும் சிரிய மாணவர்களின் குழுவுடன் அமைச்சர் உரையாற்ற உள்ளார். மேலும், சிரிய ஆர்த்தடாக்ஸ் சர்ச் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. இந்தியாவும் சிரியாவும் நீண்ட காலமாக நெருங்கிய, இணக்கமான நட்புறவைக் கொண்டுள்ளன, இது இரு நாடுகளின் மக்களிடையே வலுவான பிணைப்பில் வேரூன்றியுள்ளது. சிரியாவில் மோதல்கள் நடந்து கொண்டிருந்த காலகட்டங்களில் இந்தியா தனது தூதரகத்தை சிரியாவில் நட்புடன் இயக்கி வந்தது. ஏராளமான மாணவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் நோயாளிகள் இந்தியாவிற்கு பயணம் செய்கின்றனர். ITEC திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை திட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் மூலம் பல ஆண்டுகளாக சிரிய இளைஞர்களின் திறனை வளர்ப்பதில் இந்தியா மகத்தான பங்களிப்பை அளித்துள்ளது.

4. இந்த பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுக்கு மேலும் உத்வேகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புது டெல்லி**
**ஜூலை 11, 2023**